**அனுப்புநர்**

இயக்குநர் ,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும்
இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி.

**ந.க.எண். 016387 / எப்1 /2023** **நாள். 03.01.2024**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2023 – 2024–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்தல், TML மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துதல் – கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:14.12.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்:21.12.2023

------

பார்வை 1 –ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறையில், 2023–2024–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை **15.12.2023 முதல் 30.12.2023** வரையிலும் மற்றும் பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக புதுச்சேரி பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் **21.12.2023 முதல் 30.12.2023** வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இத்துடன் இணைத்தனுப்பப்படும் பட்டியலில் உள்ள பள்ளிகளில் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). **எனவே, பத்தாம்வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கும்,TML மற்றும் தேர்வு கட்டணம் செலுத்தவும் 05.01.2024 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது.**

இதுவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் **கடைசி வாய்ப்பாகும். இதன்பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது .**

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவரும், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை 05.01.2024 –க்குள் நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு: பட்டியல்**

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்–
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

–தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் உடன் இப்பணியினை மேற்க்கொள்ள அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.